[1973 மார்ச் 9

Madurai Meenakshi Temple Pudumantapam

* 310 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Pudumandapam in the Madurai Meenakshi Temple, has been converted into an Art Gallery; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

THIRU N. DENNIS: May I know whether a special law may be made to preserve these art galleries and create national importance to them?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அந்தக் கோயிலில் இருக்கும் புது மண்டபத்தைப் பாதுகாப்பது மூலம், கலைக் கூடமாக மாற்றுவதன் மூலம் அங்குள்ள சிற்பங்களைப் பாதுகாக்க முடியும் என்ற நோக்கத்துடன் யோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் இருக்கின்ற இடையூறு ஏற்கனவே அந்தப் புது மண்டபத்தின் மத்தியப் பகுதியைச் சுற்றியுள்ள பகுதியில் 314 நபர்கள் கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகளின் மூலம் 4,360 ரூபாய் வாடகை வந்து கொண்டிருக்கிறது. அந்த வருமானத்தைப் பொருட்படுத்தவில்லை என்றாலும் கடைக்காரர்களை வெளியேற்றுகின்ற நேரத்தில் மாற்று இடம் கொடுக்க வேண்டும். இந்த நிலைமையில் என்ன செய்வது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]